www.tamilarangam.net

லண்டன்
24.08.2002

# தமிழினப்பற்றாளர்களின் கண்டனம்

தமிழர் விடுதலைக் கூட்டணி லண்டன் கிளையின் பெயரால், 25 - 08 - 2002 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெற ஏற்பாடாகியுள்ள கூட்டத்திற்கு, நினைவுப் பேருரை நிகழ்த்த தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் இருந்து வெளிவருகின்ற Front Line என்ற ஆங்கிலச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான **திரு ராம்** வருகை தர உள்ளது குறித்து, தமிழினப் பற்றாளர்களின் வன்மையான கண்டனத்தைக் கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு இத்தால் தெரிவிக்கின்றோம்.

நாம் கண்டிப்பதற்குக் காரணம் **திரு ராம்** Front Line சஞ்சிகை மூலமும், Hindu பத்திரிகை மூலமும் வெளியிடுகின்ற தமிழின நலன்களுக்கு எதிரான கருத்துக்களே!

அதிலும் விசேடமாக ஈழத்தமிழர் போராட்டத்திற்கும், இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றவர்களின் தலைமைச்சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் எதிரானவராகவே **திரு ராம்** தமிழினப் பற்றாளர்களால் நோக்கப்படுகின்றார்.

**இந்த ஒரே ஒரு காரணத்திற்காக மட்டுமே கூட்டத்தில் பங்கு பற்ற வேண்டாம் என்று** மேற்படி கூட்டத்திற்கான அழைப்பிதழ் பெற்ற தமிழினப் பற்றாளர்களையும், கூட்டத்திற்கான அழைப்பிதழ் பெறாத நிலையிலும் பங்குபற்ற எண்ணங் கொண்டுள்ள தமிழினப்பற்றாளர்களையும் **அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

**லண்டன் வாழ் தமிழினப் பற்றாளர்கள்**